அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சி
ALL INDIA SAMATHUVA MAKHAL KATCHI



Phone : 044 - 2814 3306, 2814 3307 Fax : 044 - 4212 4624

அ.எண்: 59 /2017
தேதி: 02.06.2017

**கவிக்கோ அப்துல் ரகுமான் மறைவு**

**அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின்
நிறுவனத் தலைவர் ஆர்.சரத்குமார் இரங்கல்.**

கவிக்கோ அப்துல் ரகுமான் அவர்கள் உடல் நலக்குறைவால் மறைந்த செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தேன். இவரது மறைவு தமிழ்நாட்டிற்கும், அனைத்து தமிழ் இலக்கியவாதிகளுக்கும், கவிஞர்களுக்கும் ஓர் பேரிழப்பு. இவரது தந்தை சிறந்த உருது கவிஞராக இருந்தாலும், பல மொழிகள் அறிந்த இவர் தமிழ் மொழியை தேர்ந்தெடுத்து சிறப்பாக பயின்று இலக்கண, இலக்கியங்களை கற்று கவிதைகள் எழுதியவர். தமிழில் கவிதை குறியீடுகள் குறித்து ஆராய்ந்து முனைவர் பட்டம் பெற்ற இவர் "சாகித்திய அகாடமி விருது" மற்றும் தமிழ் கவிதைகள், இலக்கணங்களுக்காக பல விருதுகளை பெற்றவர். இவரை பிரிந்து வாடும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் என் சார்பாகவும், அகில இந்திய சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகவும் ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக்கொள்கிறேன்.

**ஆர் சரத்குமார்**
நிறுவனர் - தலைவர்

எண் : 46, இராமகிருஷ்ணா தெரு, வடக்கு உஸ்மான் ரோடு, தியாகராயா நகர், சென்னை – 600 017
No.46, Ramakrishna Street, North Usman Road, Thiyagaraya Nagar, Chennai - 600 017.
தினசரி பார்க்கவும் website : www.aismk.in Mail: samathuvam2007@gmail.com